செ.வெ.எண்: 37 நாள்:13.09.2021

**நாமக்கல் மாவட்டம்**

**1 வயது முதல் 19 வயது வரை உள்ள 5,89,401 நபர்களுக்கும் 20-30 வயது வரை உள்ள கர்ப்பிணி அல்லாத 1,53,830 பெண்களுக்கும் குடற்புழு நீக்கும் அல்பெண்டசோல் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப அவர்கள் தகவல்.**

-------

நாமக்கல் மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து துறையின் சார்பில் 13.09.2021 முதல் 18.09.2021 வரை முதல் சுற்றும், 20.09.2021 முதல் 25.09.2021 வரை இரண்டாம் சுற்றும் திங்கள், வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளிலும், 27.09.2021 திங்கள் கிழமை அன்று விடுபட்ட குழந்தைகளுக்கும் குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் முகாம்கள் நடைபெறவுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 1 வயது முதல் 19 வயது வரை உள்ள 5,89,401 குழந்தைகளுக்கும், 20-30 வயது வரை உள்ள கர்ப்பிணி அல்லாத 1,53,830 பெண்களுக்கும் குடற்புழு நீக்கும் அல்பெண்டசோல் மாத்திரைகள் இலவசமாக வழங்குவதற்கான துவக்க நிகழ்ச்சி, எர்ணாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று (13.09.2021) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப அவர்கள் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு அரசு குழந்தைகள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்களின் உடல் நலனில் அக்கறை கொண்டு, நோய்த்தொற்றிலிருந்து பாதுகாத்திடும் வகையில் சுகாதாரத்துறையின் மூலம் பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது. இதன் ஒரு பகுதியாக இரத்த சோகை நோய்க்கு முக்கிய காரணியாக விளங்கும் குடற்புழுவை நீக்க வருடந்தோறும் மாணவ, மாணவியர்களுக்கு இரண்டு முறை குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படுகிறது. குடற்புழு நீக்கத்தால் உடல் ஆரோக்கியம் மேம்படுகிறது.

இங்கு வந்துள்ள மாணவ, மாணவியர்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள 19 வயதிற்குட்பட்ட அவைருக்கும் குடற்புழு மாத்திரையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும். அனைவருக்கும் இம்மாத்திரைகள் அங்கன்வாடி மையங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றது.

தங்கள் பள்ளிகளில் அனைத்து வியாழக்கிழமைகளிலும் அரசால் வழங்கப்படுகின்ற இரும்பு சத்து மாத்திரைகளை மாணவ, மாணவியர்கள் அனைவரும் கட்டாயம் தவறாமல் சாப்பிட வேண்டும். இதனால் இரத்தசோகை குறைபாடு வராமல் தடுக்கப்படுவதோடு, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து சுறுசுறுப்பாக இருக்கவும், அறிவுத்திறன் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்தவும், ஆரோக்கியமாக இருக்கவும் முடியும். இது போன்ற சத்தான மாத்திரைகளை எடுத்துக்கொள்வதால் இன்று மட்டுமின்றி வாழ்நாள் முழுவதும் நாம் ஆரோக்கியமாக இருக்க முடியும்.

நாம் தினந்தோறும் உணவு உண்ணும் முன் கட்டாயம் கைகளை கழுவ வேண்டும். கைகளை எவ்வாறு கழுவ வேண்டும் என்பது குறித்து உங்களுக்கு கற்று கொடுக்க செவிலியர்கள் இன்று வருகை தந்துள்ளார்கள். நீங்களும் வெளியில் விளையாட

செல்லும் போது கட்டாயம் காலணிகளை அணிதல் வேண்டும். வீடுகளில் தனி கழிப்பறை உள்ளதை உறுதி செய்திட வேண்டும். வீட்டில் உள்ள பெரியவர்கள், பெற்றோர் உள்ளிட்ட அனைவருக்கும் சுகாதாரம் குறித்து எடுத்துரைத்து, கழிப்பறைகளை உபயோகித்திட விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மேலும், கொரோனா நோய் தொற்று காலத்தில் போதிய பாதுகாப்புகளுடன் பள்ளிக்கு வரும் நீங்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்து வருவதோடு, மற்றவர்களுக்கும் முகக்கவசம் அணிந்திட அறிவுறுத்திட வேண்டும். ஆசிரியர்களும் பாடங்கள் நடத்திடும் போது முகக்கவசம் அணிந்திட வேண்டும்.

நீங்கள் அனைவரும் கொரோனா நோயத்தொற்று பரவலை தடுத்திட அரசிற்கு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும். உங்கள் வீடுகள் மற்றும் அருகில் உள்ள 18-வயது நிரம்பிய அனைவரும் முதல் தவணை மற்றும் இரண்டாம் தவணை கொரோனா நோய்த்தொற்று தடுப்பூசிகளை போட்டுக்கொள்ள அறிவுறுத்தவேண்டும். இதன் மூலமாக சுகாதாரமான நோயற்ற முன்னோடி மாவட்டமாக நாமக்கல் மாவட்டத்தை உருவாக்கிடலாம். பள்ளியில் பயிலும் மாணவிகள் அனைவரும் நான் 18 வயதிற்கு முன்பும், மாணவர்கள் 21 வயதிற்கு முன்பும் திருமணம் செய்து கொள்ளமாட்டோம் என்றும், கட்டாயம் கல்லூரி படிப்பை முடித்து, வேலைவாய்ப்புகளை பெற்று உங்களுடைய பெற்றோர்களை நன்கு கவனித்து கொள்வோம், அதன் பிறகே திருமணம் செய்து கொள்வோம் என்று உறுதி மொழியினை எனக்கு வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் குடற்புழு நீக்க கையேட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட முதன்மை கல்வி அலுவலர் அவர்கள் மற்றும் பள்ளி தலைமையாசிரியர் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

பின்னர், மாணிக்கம்பாளையம் அரசு துணை செவிலியர் பயிற்சி பள்ளியில் பயிலும் மாணவியர்கள் சுத்தமாக கை கழுவும் முறை குறித்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு செயல்முறை விளக்கம் அளித்ததை மாவட்ட ஆட்சித்தலைலர் அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் திரு.அ.பாலுமுத்து, துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.பிரபாகரன், எர்ணாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் மரு.தோ.ராஜேந்திரன், எர்ணாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய உதவி மருத்துவர் மரு.ஜெ.புவனேஸ்வரி மற்றும் பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.